ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 09.07.2020

## நாணயக் கொள்கை மீளாய்வு: யூலை 2020

### இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை மேலும் தளர்த்தியிருக்கிறது

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை, 2020 யூலை 08ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைப்பதற்கு தீர்மானித்திருக்கிறது. சந்தைக் கடன் வழங்கல் வீதங்களை மேலும் குறைப்பதனைத் தூண்டி அதன்மூலம் பொருளாதாரத்தின் உற்பத்தியாக்கத் துறைகளுக்கான கடன் வழங்கல் தீவிரமான முறையில் அதிகரிப்பதற்காக நிதியியல் முறைமையை ஊக்குவிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு சபை இத்தீர்மானத்திற்கு வந்திருக்கின்றது. இது, குறைக்கப்பட்ட பணவீக்க நிலைமைகளுள்ள சூழலில் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் அதேபோன்று பரந்த பொருளாதாரத்திற்கும் வலுப்படுத்தப்பட்ட ஆதரவினை வழங்கும்.**

கொவிட்-19 தொற்றின் பரவல் உலகளாவிய ரீதியில் அண்மைக்கால வளர்ச்சி வாய்ப்புக்களை கணிசமானளவிற்கு பாதித்திருக்கின்ற வேளையில் இலங்கை தொடர்பில் கிடைக்கத்தக்கதாகவுள்ள குறிகாட்டிகள் 2020இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பொருளாதார வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டுகின்றன. நாணய ரீதியான ஆதரவு மற்றும் இறைத்தூண்டல் வழிமுறைகள் என்பனவற்றின் காரணமாக ஆண்டின் பின்னரைப்பகுதியில் மீளெழுச்சியொன்று எதிர்பார்க்கப்படுகின்ற போதும், நடுத்தரகாலப் பகுதியில் உயர்வானதும் உறுதியானதுமான பொருளாதார வளர்ச்சியைப் பேணி வளர்ப்பதற்கு வளர்ச்சியை ஊக்குவிக்கின்றதும் நம்பிக்கையை அதிகரிப்பதுமான அமைப்பியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது தவிர்க்கமுடியாததாகக் காணப்படுகின்றது.

வெளிநாட்டுத் துறையில், இறக்குமதியில் ஏற்பட்ட சுருக்கம் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட சுருக்கத்தை விஞ்சிக் காணப்பட்டமையின் காரணமாக 2020இன் முதல் ஐந்து மாதகாலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை குறுக்கமடைந்திருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களை குறைப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 மாச்சின் நடுப்பகுதியிலிருந்து ஏப்பிறல் நடுப்பகுதி வரை சுருக்கமான தளம்பல்களுக்கு தொடர்ந்தும் உட்பட்டிருந்த

இலங்கை ரூபா அதன் பின்னர் குறிப்பிடத்தக்க உயர்வொன்றினைப் பதிவுசெய்திருந்தது. 2020 யூன் இறுதியளவில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6.7 பில்லியனாக அமைந்து 4.2 மாத இறக்குமதிகளை உள்ளடக்கப் போதுமானதாகக் காணப்பட்டது.

சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, கொள்கை வீதக் குறைப்புக்களின் தாக்கத்தினையும் உள்நாட்டு பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினையும் பிரதிபலித்தன. எனினும், இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான தளர்த்தல் வழிமுறைகளுடன் இணங்கிச்செல்லும் விதத்தில் சந்தை கடன் வழங்கல் வீதங்களை கீழ்நோக்கிக் குறைப்பதற்கு இன்னமும் வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. மிகையான திரவத்தன்மை உயர்ந்தளவில் வங்கிகளுக்கு கிடைக்கத்தக்கதாகவிருக்கின்ற போதும் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020 மேயில் கணிசமானளவிற்கு சுருக்கமடைந்தே காணப்பட்டது. எனினும், கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட உயர்ந்தளவான சலுகைக் கொடுகடன் திட்டங்களும் கடன் வழங்கல் வீதங்களில் எதிர்பார்க்கப்படும் கடுமையான குறைப்புக்களின் ஆதரவின் காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன்கள் இனிவரும் காலப்பகுதியில் அதிகரிக்கும் போல் தெரிகிறது. அதேவேளை, 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் அரச துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்நாட்டுக் கொடுகடனிலும் அதேபோன்று ஒட்டுமொத்த நாணய விரிவாக்கத்திலும் அதிகரிப்புக்களைத் தூண்டியது.

பொருளாதாரத்தின் விரைந்த மீட்சிக்கு ஆதரவளிக்கும் தேவையினை பரிசீலனையில் கொண்டு நாணயச் சபை 2020 யூலை 08ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் 2020 யூலை 09ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்விதத்தில் 100 அடிப்படைப் புள்ளிகளினால் ஒவ்வொன்றையும் முறையே 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைப்பதற்கு தீர்மானித்தது. இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் கொள்கை வட்டி வீதங்களில் மொத்தமாகக் குறைக்கப்பட்ட 250 அடிப்படைப் புள்ளிகளின் முழுநன்மைகளையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை முதன்மையாகக் கொண்டு அனைத்து நிதியியல் நிறுவனங்களும் எதுவித தாமதமுமின்றி கிடைக்கச்செய்தல் வேண்டுமென நாணயச் சபை வலுவாக வலியுறுத்துவதற்கு விரும்புகிறது. இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 300 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்ட நியதி ஒதுக்கு விகிதத்தின் தாக்கத்தினால் அதிகரித்த திரவத்தன்மை மட்டங்களை தனியார் துறை கடன்பாட்டாளர்களுக்கு விடுவிப்பதற்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. இது வங்கிகளின் நிதிச் செலவினைக் குறைத்திருக்கின்றது. பொருளாதாரத்தின் உதவி தேவைப்படும் துறைகளுக்கென மத்திய வங்கியினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சலுகை ரீதியான கொடுகடன் திட்டங்களுடன் சேர்த்து பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளுக்கு கடன் வழங்குவதற்கு இத்தகைய மேலதிக திரவத்தன்மையை பயன்படுத்துதல் வேண்டும். மத்திய வங்கி உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளை தொடர்ந்தும் கண்காணிப்பதுடன் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்துவதற்கான மேலதிக வழிமுறைகளையும் எடுக்கும்.

| நாணயக் கொள்கைத் தீர்மானம்: | கொள்கை வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன் நியதி ஒதுக்கு வீதம் மாற்றப்படவில்லை |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 4.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 5.50% |
| வங்கி வீதம் (துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்துடன் தன்னியக்கமாகவே சீராக்கப்படுகின்றது) | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன் அவர்களுடனான பத்திரிகை மாநாடு, 2020 யூலை 09ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2020 ஓகத்து 20ஆம் நாளன்று வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

### அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2018** | | | | | **2019** | | | | |
| | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் |
| வேளாண்மை | 5.9 | 6.6 | 5.1 | 8.2 | **6.5** | 5.0 | 1.5 | 1.0 | -4.1 | **0.6** |
| கைத்தொழில்கள் | 1.6 | 3.5 | 3.5 | -3.4 | **1.2** | 3.9 | 1.6 | 3.5 | 1.4 | **2.7** |
| பணிகள் | 5.1 | 4.6 | 4.4 | 4.2 | **4.6** | 3.7 | 0.7 | 2.1 | 2.7 | **2.3** |
| மொ.உ.உற்பத்தி | **3.8** | **4.0** | **3.7** | **1.9** | **3.3** | **3.7** | **1.1** | **2.4** | **2.0** | **2.3** |

*மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | நவெ 19 | திசெ 19 | சன 20 | பெப் 20 | மாச் 20 | ஏப் 20 | மே 20 | யூன் 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.4 | 4.8 | 5.7 | 6.2 | 5.4 | 5.2 | 4.0 | 3.9 |
| | தேநுவிசு(2013=100) | 4.1 | 6.2 | 7.6 | 8.1 | 7.0 | 5.9 | 5.2 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 5.1 | 4.8 | 3.0 | 3.2 | 2.9 | 3.1 | 2.9 | 3.1 |
| | தேநுவிசு(2013=100) | 5.5 | 5.2 | 3.9 | 3.4 | 3.2 | 3.2 | 3.7 | - |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன 20 | பெப் 20 | மாச் 20 | ஏப் 20 | மே 20 | சன 20 | பெப் 20 | மாச் 20 | ஏப் 20 | மே 20 |
| ஒதுக்குப் பணம் | 936 | 963 | 1,014 | 1,022 | 997 | -1.4 | 0.0 | 5.3 | 10.5 | 17.3 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 7,704 | 7,793 | 8,098 | 8,259 | 8,293 | 8.3 | 8.4 | 11.6 | 13.2 | 13.7 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 117 | 127 | 63 | 119 | (15) | 196.4 | 232.5 | 104.8 | 0.6 | -113.5 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,587 | 7,666 | 8,036 | 8,140 | 8,308 | 4.9 | 5.2 | 11.3 | 13.4 | 15.6 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,886 | 2,928 | 3,199 | 3,264 | 3,428 | 9.9 | 9.5 | 22.4 | 26.2 | 32.1 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 820 | 833 | 868 | 934 | 953 | 15.3 | 16.5 | 23.6 | 28.7 | 31.1 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,799 | 5,824 | 5,944 | 5,958 | 5,888 | 4.5 | 4.8 | 6.5 | 7.6 | 6.4 |
| விரிந்த பணம் ($M_4$) | 9,573 | 9,676 | 9,973 | 10,160 | 10,196 | 9.5 | 9.6 | 12.0 | 13.3 | 13.6 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | சன 20 முடிவில் | பெப் 20 முடிவில் | மாச் 20 முடிவில் | ஏப் 20 முடிவில் | மே 20 முடிவில் | யூன் 20 முடிவில் | 2020 யூலை 08 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.50 | 6.50 | 6.25 | 6.00 | 5.50 | 5.50 | 5.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 7.50 | 7.50 | 7.25 | 7.00 | 6.50 | 6.50 | 6.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 6.98 | 6.95 | 6.75 | 6.40 | 5.84 | 5.52 | 5.51 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 7.51 | 7.42 | 7.00 | 6.75 | 6.69 | 5.50 | 5.08 |
| 182-நாள் | 8.15 | 8.06 | 7.25 | 6.80 | 6.82 | 5.53 | 5.18 |
| 364-நாள் | 8.59 | 8.58 | 7.50 | 7.00 | 6.93 | 5.66 | 5.32 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 9.68 | 9.47 | 9.24 | 9.49 | 9.16 | 8.48 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.47 | 13.36 | 13.22 | 13.08 | 12.96 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 12.53 | 12.54 | 12.19 | 11.67 | 11.68 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.14 | 8.06 | 7.90 | 7.77 | 7.57 | 7.38 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 9.97 | 9.83 | 9.65 | 9.51 | 9.26 | 9.00 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 9.34 | 8.55 | 8.22 | 7.83 | 7.83 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*